**தலைப்பு 210 - தகவல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 210 - தகவல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 08 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 234.90 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 193.47 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 41.43 மில்லியன் அதாவது 17.64 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 216.36 | 179.64 | 36.72 | 16.97 |
| மூலதனம் | 18.54 | 13.83 | 4.71 | 25.40 |
| மொத்தம் | 234.90 | 193.47 | 41.43 | 17.64 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9.72 | 9.71 | 7.00 | 7.67 | 40.00 | 29.03 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 7002/0000/00/0246/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 9.96 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் 6000/0000/00/0016/0075/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8.9 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

தகவல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்கும் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 18,353,966 ஆகும்.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 19 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை மற்றும் பல்வேறு முகாமைத்துவ நலிவுகளின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் அந்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 32 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.4 கட்டுநிதிக் கணக்குகள்

நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக பதவிநிலையற்ற 11 உத்தியோகத்தர்களுக்கு 25 சந்தர்ப்பங்களின் போது ரூபா 710,700 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய ரூபா 7,348,912 கூட்டுத்தொகையான 10 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

21001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மரணமடைந்த மற்றும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 261,272 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.7.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த கொள்வனவுத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் முதல் முடியும் வரை ஒவ்வொரு கொள்வனவு நடவடிக்கைகளின் படிமுறைகளையும் காலரீதியில் விபரித்து கொள்வனவு கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 4.2.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்படும் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் அக்கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக விரிவானதொரு கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்காக 11 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 04 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக திணைக்களத்தின் முகாமைத்துவத்தால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட அமர்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் மீளாய்வாண்டின்போது ஒரு குழுக்கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

முறையான சாத்திய ஆய்வொன்று மேற்கொள்ளாது 2.1 சதவீத வட்டி விகிதத்தின் அடிப்படையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி வழங்குனர் மற்றும் தகவல் திணைக்களத்திற்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடன் உதவியின் கீழ் 9,150,000 பிரான்ஸ் பிரேங்க் (யூரோ 1,442,601) இற்குச் சமமான ரூபா 102.2 மில்லியனுக்கு 2003 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நிற இரசாயன கூடத்திற்கான உபகரணங்கள் 2016 மே மாதம் வரையிலும் விளைவற்றும் உரிய பராமரிப்பு இன்றியும் காணப்பட்டன. இது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் மூன்று நபர்களையுடைய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரத்தை பகிரங்க கேள்வி கோரலின் மூலம் விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனக் குறிப்பொன்று சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தால் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

**3.9 செயலாற்றல்**

**செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 13 பணிகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4.6 மில்லியன் தொகையான ஆய்வுகூடக் கட்டிடத்தை பழுதுபார்த்தலும் ஆராய்ச்சிப் பிரிவை பழுதுபார்த்தலும்.

(ஆ) பாதுகாப்புக் கூடத்தை பழுதுபார்த்தல்.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வெளியீட்டுப் பணியகத்தின் மேல் மாடியை பிரித்து வேறுபடுத்தும் செயற்பாட்டிற்காக விரிவான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படாமல் உரிய செயற்பாடு பெறுமதிசேர் வரியுடன் ரூபா 285,168 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டதற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களுக்கு உரித்தற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வேறு விஷேட அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 02 மாதங்களுக்காக அவர்களின் பிரத்தியோக பிரயாணங்களுக்கான எரிபொருளுக்காக ரூபா 201,026 செலவிடப்பட்டிருந்தது.

**3.11 நட்டங்களும் இழப்புக்களும்**

தகவல் திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தின் நிர்மாணங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கும், ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,623,624 தொகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் மற்றும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தின்

குறைபாடுகளை சரிசெய்வதற்காகவும், மேலதிகமாகச் செலுத்தப்பட்டவைகளை அறவிடுவதற்காகவும் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தின் ஒலிப் பிரிவில் 160KVA இயலளவையுடைய பிரேக்கர் ஒன்றைப் பொருத்தவதற்காக 2015 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 1,201,480 தொகை இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மின்தாங்கி 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**3.13 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக திணைக்களத்தால் சீர் செய்யப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 4.2 | 2007 பெப்ரவரி 24 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/140/2007 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கைக்கு முரணாக அதிக விலைகளில் ஆடம்பர அறை வசதிகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 611,788 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கான ஆவணங்கள் எதுவும் திணைக்களத்தின் கொள்வனவுப் பிரிவில் காணப்படவில்லையென்பதை 2015 நவம்பர் 24 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 4.13 | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊடகக் கலந்துரையாடல்களுக்காக உணவு வழங்கும் போது ரூபா 1,156,288 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 4.17 | ஆராய்ச்சி விடய பட்டப்படிப்பினை விடயமொன்றாக பயிலுகின்ற மூன்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 07 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட வேண்டிய விசேட ஆராய்ச்சி அலகொன்று திணைக்களத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. நாட்டின் அபிவிருத்தி தொடர்பான துறைகளை ஆய்வு செய்வதற்கு அந்தப் பிரிவிற்கு கையளிக்கப்படாமல் முறையற்ற விதத்தில் கேள்வி கோரி வெளிநிறுவனமொன்றிற்கு ரூபா 3,380,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிக்கை எந்த நடவடிக்கைக்காகவும் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.14 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தில் விற்பனை விலைப் பட்டியல் தயாரித்தல், நுகர்வோர்களுக்கு இருப்பினை கண்டறிவதற்கு வசதிகளை வழங்குதல், இருப்பை பதிவேடுகளுக்குக் கொண்டுவருதல் தொடர்பான கணனி மென்பொருள் ஒன்று ரூபா 600,000 செலுத்தி 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்தது. விற்பனை விலைப்பட்டியல் தயாரித்தல் தவிர ஏனைய செயற்பாடுகளுக்காக இந்தக் கணனி மென்பொருள் 2016 மே மாதம் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்குரிய கட்டிடங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை சுத்திகரிப்பதற்காக 2015 மே 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 1.75 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் உரிய கம்பனி உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(i) உடன்படிக்கை செய்யப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக இருபது தொழிலாளர்களும் வேலைப் பரீட்சகரொருவரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட ஊழியர் எண்ணிக்கையை ஈடுபடுத்துவதற்கு அந்நிறுவனம் தவறியிருந்தது. அந்த நிலைமையின் கீழ் அநேகமான நாட்களில் ஊடகத்துறை அமைச்சின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் பின்னர் அந்த ஊழியர்களே தகவல் திணைக்களத்தின் சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஊழியர்களின் நாளாந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் வருகை அறிக்கை என்பன பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படாமையினால் உரிய நாளின் இறுதியிலோ அல்லது பின்னைய நாளிலோ வருகை மற்றும் வெளிச் செல்கை கையொப்பமிடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட வரவினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட புதிய ஊடாக நிலையத்தின் நான்காவது மாடியின் நிர்மாண நடவடிக்கைகள் Water Proofing உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமையினால் நீர் கசிவிற்குள்ளாகி அதன் நிறப்பூச்சுக்கள் மற்றும் சுவர்களின் சாந்துகளும் கழன்றிருந்தன. அக் குறைபாடுகள் ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அந்த நிலை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், அந்நிலைமை தொடர்ந்தும் அதிகரித்திருந்தது. முன்பக்க நுழைவு கதவிற்கு அருகில் கூரைக்கு போடப்பட்டிருந்த தகரத்திலான மேவுகை கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 4 வருட காலமான குறுகிய காலத்தில் பழுதடைந்திருந்தது. அந்த ஒப்பந்தக்காரரின் குறைபாட்டினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 461,538 தொகை மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்டிருந்தது.

**3.15 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை ஊடாக சங்கத்தின் மதுபானம் விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரம் 2008 ஆம் ஆண்டு முதல் முறையான உடன்படிக்கையின்றி வெளிநபரொருவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக அவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,653,515 தொகை 2016 மே மாதம் வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. மேலும் இந்த

அனுமதிப்பத்திரம் 2016 ஆம் ஆண்டிற்காக நீடித்தல் கைவிடப்பட்டமைக்கான சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 06 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 04 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 227 | 180 | 47 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 45 | 07 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 20 | 09 | 11 |
| | மொத்தம் | 330 | 244 | 86 |